ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642.

# திராவிடநாடு

மலர் 11. 12—10—52 இதழ் 15

# ★ "எல்லாம் உண்டு—எமக்கு இல்லை!" ★

பாடுபட்டும் பலன் காணாது தவிக்கும் பஞ்சைகளைப் பார்த்து, கவிஞன் ஷெல்லி பாடினான். "எல்லாம் இருக்கிறது; ஆனால், உனக்குத்தான் இல்லை!" என்பதாக.

கவிஞன் குரலை, காங்கிரசாரின் ஆட்சியில், இந்திய உபகண்ட முழுமையும் கேட்கிறோம். "எல்லாம் இருக்கிறது; ஆனால் எமக்குத்தான் இல்லை!"—என்று, ஏழைகள் கண்ணீர் வடிக்கிறார்கள்.

"வானம் பொழியுது, பூமி விளையுது—வரி ஏண்டா உனக்கு, வெள்ளைக்காரா?"—என்று பரங்கியரைப் பார்த்து, வீரபாண்டியக் கட்டபொம்மு கேட்டதாகக் கூறுவார்கள். இயற்கை தரும் செல்வத்தில் உனக்கேன் பங்கு? — என்பதுவே, அந்த வாக்கியத்தின் சாரமாகும்.

வெள்ளைக்காரனைப் பார்த்து, ஆத்திரம் பொங்க, பொம்மு கேட்டான். வெள்ளைக்காரர்களை விரட்டிய காங்கிரஸ்காரர்களை, வாழ முடியாது தவிக்கும் நாடு கேட்கிறது, "பூமி விளையுது—எமக்கேன் புசிக்க உணவில்லை?" என்று.

இந்தக் கேள்வி சகாரா பாலைவனத்தில் கிளம்பினால், ஒதுக்கிவிடலாம். ஆனால், தஞ்சைப் பூமியில் ஒலிக்கிறது! பொன்னி நாடு என்று காவிரி பாயும், தஞ்சையை அழகு படுத்திக் கூறுகிறது, தமிழ் இலக்கியம். நெற்களஞ்சியம் என்று சிறப்பித்துச் செப்புகிறது, பூகோள நூல். ஆனால், அங்கே உள்ள மக்கள் புசிக்க உணவில்லாது திண்டாடுகிறார்கள்! உண்மை, இது. ஆச்சாரியார் அவர்கள், கட்டுப்பாட்டை ரத்து செய்ததால் உண்டான சூழ்நிலை.

தற்போதைய காலம், சாகுபடி நேரமாகும்! சாகுபடிக்கே நெல் இல்லாமல் தவிக்கிறார்கள், சிறு மிராசுதாரர்கள். ஆச்சாரியாரின் உத்தரவு வந்ததுமே, இந்த அவதி ஏற்படுமென, நமது இதழில் குறிப்பிட்டோம். தேசிய இதழ்களும் வேறு பலரும் தெந்தினு பாடினர்கள்! நெற்களஞ்சியத்திலே இருந்த நெல், பஞ்சப் பிரதேசங்களை நோக்கி, பணாதமேறி, பவனி போயிற்று. களஞ்சியம் வறண்டது! இப்போது 'இல்லை'! யெனும் குரல் ஒலிக்கிறது!!

"மூட்டை முப்பது ரூபாய்! இருக்கிறதா, நெல்?"

"மனைவியின் காதணிகளை அடகு வைத்து வந்ததுங்க—பணம். நெல் தர்ரீங்களா?"

இதுபோல, மக்கள் அலைகிறார்கள்! நெல் கிடைக்கவில்லை!! சாகுபடி செய்யும் மத்தியதர விவசாயிகள், தத்தமது ஆட்களுக்கு, நெல் தருவதற்குப் பதில் காசு கொடுக்கிறார்கள்—கூலியாக. காசை வைத்துக் கொண்டு, ஏழை மகன், அலைகிறான்! அரிசி இல்லை. சர்க்காரின் "நிவாரணக் கடைகள்" கையை விரிக்கின்றன!!

படுமோசமான இந்நிலைக்கு எவர் காரணம்? பஞ்சையும் பாரியும், வயல்களைப் பார்த்து அழுகிறான்! பணமூட்டை, மகிழ்கிறான் வரும் தொகையை எண்ணிக்கொண்டு.

விலை ஏறிவிட்டது!! — புசிக்கும் பொருள்களின் விலை, ஏறிக் கொண்டேயிருக்கிறது. தஞ்சையில் மட்டுமல்ல, நாடு முழுமையும்.

பொருள் இருக்கிறது — ஆனால் மக்களுக்கு எட்டக்கூடிய விலையில் இருக்கவில்லை. உயர்ந்துகொண்டே போகிறது! இந்த உயர்வு, உணவுப் பொருள்களுக்கு மட்டுமல்ல, வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களுக்கும். இந்த விலையேற்றம், நாட்டைக் கடந்த ஐந்தாறு ஆண்டுகளில், படுபாதாளத்தில் கொண்டுபோய் விட்டிருக்கிறது.

"இந்த விலை உயர்வுக்கு யார் காரணம்?"

"வியாபாரிகள்!"

"எப்படி?"

"பொருள்களைப் பதுக்கிவைத்து, கள்ள மார்க்கெட் வளர்ந்ததால்"

"கள்ளமார்க்கெட்டை காங்கிரஸ் சர்க்கார் ஏன் அடக்கியிருக்கக் கூடாது?"

"உடனே முடியுமா? இப்போது தானே சுயராஜ்யம் பெற்றிருக்கிறோம். அவசரப்பட்டால் ஆகிவிடக் கூடிய காரியமா?"

"கள்ளமார்க்கெட் கழுகுகளைத் தூக்கிலேற்றவேண்டும் என்று பண்டித நேரு கர்ஜித்தாரே!"

"ஆமாம்......"

இவ்விதம், மக்களும் கதருடையாரும் பேசிக் கொண்டதைக் கேட்டிருக்கிறோம். பொருள்களின் விலை ஏறியதற்குக் காரணம், கொள்ளை லாபக்காரர்கள்! கொள்ளைலாபத்தை தடை செய்ய, விலை நிர்ணயம் செய்தார்கள், அப்போதைய ஆட்சியாளர். போர்க்காலமானதால், பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட்டது. இந்தக் கிராக்கியைக் காட்டி, அதிகலாபம் பெற ஆசைகொண்ட வணிகர்களை மட்டுப்படுத்துவதற்காக விலைகளை சர்க்காரே நிர்ணயம் செய்தது. ஆனால், பலன், வெற்றிதரவில்லை. விலைநிர்ணயத்தின் விளைவாக, பொருள்கள் பதுங்க ஆரம்பித்தன! கள்ளமார்க்கெட் உருவாயிற்று!!

இந்தக் கள்ள மார்க்கெட்டை ஒழிக்கவேண்டும் என்றே கர்ஜித்தார் பண்டித நேரு. பாராளும் பொறுப்பேற்றதும் கர்ஜனை காற்றோடு போயிற்று. சொன்னார்—செய்யவில்லை! எதிர்பார்த்த மக்கள் ஏமாந்தார்கள்!!

மக்களுக்கு விலைநிர்ணயமும், கட்டுப்பாடும் தந்திருக்கவேண்டிய நன்மைகள் கள்ளமார்க்கெட்டால், குட்டிச்சுவராயிற்று.

இந்தக் கள்ளமார்க்கெட்டை ஒழித்து, மக்களைக் காத்திருக்க வேண்டிய சந்தர்ப்பத்தை, சர்க்கார் உண்டாக்கவில்லை. வாணிபக் கழுகுகளுக்கு, சர்க்கார் பணிந்துவிட்டது.

இதன் விளைவாகவே, கண்ட்ரோல் முறை, சீர்குலைந்தது.

வீடு இடிந்ததும், செப்பனிட வேண்டியவர்கள் வீட்டையே இடித்து கல்லியும் காளானும் வளர வகைசெய்வதுபோல ஆச்சாரியார் சர்க்கார் அரிசிக் கண்ட்ரோலை ரத்து செய்தது! அதன் விளைவைத்தான், தஞ்சையில் காண்கிறோம் இன்று. நிலம் பெருத்த இடத்திலும் தொல்லை! காம்பு நிரம்பிய ஜில்லாக்களிலும் சங்கடம்!

அரிசி கிடைக்கவில்லை—மற்றப் பொருள்களுக்கு உண்டான விலை யேற்றமும் ஒழியவில்லை. இதற்குக் காரணம் சர்க்காருடைய கூனல் கொள்கையும், குனிந்து கொடுத்த போக்கும்தான்.

இந்தப்போக்கினையே அப்போது முதல் நாம் சுட்டிக்காட்டி வருகிறோம். "நேரு சர்க்கார் பண பிம்பங்களுக்குப் பணிந்துவிட்டது. கள்ள மார்க்கெட் கொள்ளையருக்குத் தலை வணங்கிவிட்டது" என்று, நாம் கூறிவருவது. நம்முடைய குற்றச் சாட்டையும் கண்டனத்தையும் கேட்ட தேசிய வாதிகள் செப்பத் தவறவில்லை. "ஏதோ உளறுகிறார்கள்! கள்ள மார்க்கெட்காரர்களைக் கழுவேற்றுவதாமே. கொள்ளை லாபத்தை ஒழிப்பது இலேசான காரியம்போலும்! தெரியாமல் உளறுகிறார்கள்" என்று, நமக்குப் புத்திமதி கூறினார்கள். ஏதோ மாபெரும் காரியம் போலவும் அதைச் செய்தால் புதிதாகப் பெற்ற சுயராஜ்யம், சிதைந்துவிடும் என்று பிறர் கருதவேண்டும் என்ற நோக்கத்திலும்.

கள்ளமார்க்கெட்டைத் தடுப்பதென்பது மிகவும் சாதாரணமான காரியம்—அதைச் செய்ய அரசாங்கத்துக்குத் துணிவும் நல்லெண்ணமும் தான் தேவை யென்பதை, அண்மையில் எகிப்து நாடு நிரூபித்துக் காட்டியுள்ளது.

நகீப் எனும் ராணுவ தளபதி, அரசுப் பொறுப்பேற்று, அங்கு செய்துவரும் காரியங்களை நாம் அறிவோம். நகீப், நேருவைப்போல மக்கள் மன்றத்தில் செல்வாக்குள்ள பொதுஜனத் தலைவர் அல்ல; பெரிய அரசியல் பிரமுகருமல்ல. ஆனாலும், துணிந்து சில காரியங்களைச் செய்துள்ளார்.

பரூக் மன்னரின் பிடியில் கிடந்த எகிப்தில், விலைவாசிகள் யாவும் உயர்ந்து கிடந்தன. மக்கள் வாடினார்கள்! கொள்ளை லாபமும் கள்ள மார்க்கெட்டும் கொட்டமடித்தன. இதை மட்டுப்படுத்த, நகீப், துவங்கிய காரியங்களை, காங்கிரஸ் சர்க்காரின் பார்வைக்கு வைக்கிறோம்.

உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன.

மூன்று மடங்கு விற்றவைகள் ஒரு மடங்கு ஆக, ஆக்கப் பட்டது.

விலைக் குறைவு சரிவர அமுல் நடக்கிறதா வென்று கண்காணிக்க ஆங்காங்கும், ஆபீஸ்கள், அமைக்கப்பட்டன. இன்ஸ்பெக்டர்கள், நியமிக்கப் பட்டார்கள்.

எந்தக் கடையிலாவது அதிக விலைக்கு விற்பனையானால், உடனே, பக்கத்திலுள்ள இன்ஸ்பெக்டரிடம் மக்கள் புகார் செய்யலாம்.

இவ்வித உத்தரவுகளை நகீப் சர்க்கார் பிரகடனப் படுத்தியுள்ளார்கள், நகீபுக்கு ஏற்பட்ட துணிவு, 'நம்ம சர்க்காருக்கு' ஏற்படவில்லை. விலை வாசிகளை மட்டுப்படுத்தத் துணிவு கொள்ளவில்லை. கட்டுப்பாட்டை, ஒழுங்காக, அமுல் நடத்தவில்லை. அதற்குப் பதில், கட்டுப்பாட்டை ரத்து செய்து காட்டப் போகிறேன், என்று ஆண்டவனையும் கூடத்தையும் காட்டி அறைகூவல் விடுத்தார் ஆச்சாரியார். 'அரிசி ரேஷனை ஒழிப்பது எனது முதல் உதாரணம்'—என்றார். ரேஷனை ஒழித்தாரே ஒழிய, அதனால் விளையும் தொல்லைகளைக் கண்காணிக்க எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை! பதுங்கிய வண்ணம் கொள்ளை லாபமடித்தோர், பகிரங்கமாகத் தமது வியாபாரத்தைச் செய்கிறார்கள்! மூன்று மடங்குக்கு மேல் நெல் விலை உயர்ந்துவிட்டது. ஏழைக்கு எட்டவில்லை! பண பிம்பம் கொழுக்கிறது! 'பூமி விளையுது — நாங்கள் உழைக்கிறோம். புசிக்க உணவில்லை' என்று நஞ்சை வாசி கதறுகிறான். எல்லாம் இருக்கிறது — எமக்குத்தான் கிடைக்கவில்லை' என்று புலம்புகிறான். வேதனை! கலக்கம்! ஆனால், சுயராஜ்ய சர்க்கார், தூங்கிக்கொண்டிருக்கிறது. மக்களை ஆளும், மகானுபாவர் உள்ளத்தை, வளர்ந்து வரும் தொல்லைகள் தொடவில்லை. சிறு நாடு எகிப்து. அங்கே, நகீப், துணிந்து செய்கிறார் மாறுதல்களை!

"சீர்திருத்தங்கள் செய்வது பிரமாதமான காரியமோ? நாங்களும் செய்துவிடுவோம்! ஆனால், அது இங்கே சிரமசாத்தியமான காரியம். மெள்ள மெள்ளத்தான் செய்யமுடியும். அது அறியாமல் எகிப்தைக் காட்டி ஏறுமாறாகப் பேசுகிறாயே!" என்பர், தேசியத்தலைவர்கள். அவர்களிலே சிலர், ஆச்சாரியார் நீத்தகை.

(அடுத்த பக்கம் பார்க்க)

## மதுரைக் கொலை வழக்கு

இவ்வழக்கு 3—10—52-ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. குற்றம் சாட்டப்பட்ட கன்னான் கோர்ட்டில் ஆஜராகி இருந்தான். வழக்கு மீண்டும் 11-10-52ல் ஒத்தி போடப்பட்டது.

திராவிடநாடு

காஞ்சி] 12—10—52 [ஞாயிறு

# பெயர்ப் பிரச்னை

"திராவிட நாடாமே, திராவிட நாடு!"

"ஏனிந்தப் பெயர்? எதற்கிந்த வேற்றுமை மனோபாவம்?"

"வேண்டாம் தோழர். இதை மட்டும் வலியுறுத்தாதீர்கள்!"

"ஏன், சார்! இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்......"

ஏளனம், புத்திமதி, வற்புறுத்தல், பரிதாபம் ஆகியவைகளை அஸ்திரங்களாகக் கொண்டு, நமது கோரிக்கையைத் தாக்குகிறார்கள்—நம்மிலே சிலர், நமது கற்பனையில் விளைந்த புதுப்பெயர் எனும் நினைவோடு. வேறுசிலர், விபரீத வியாக்யானங்கள் தருகிறார்கள்.

நாம், திராவிடநாடு, கோருவதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்கியே வருகிறோம். மனித உரிமை ஏற்படவேண்டும், அரசியல் விடுதலை பெறவேண்டும், பொருளாதார பேதம் ஒழிக்கப்படவேண்டும். இவைகளே முக்கிய நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை, ஓரளவு ஒப்புக்கொள்ளும் தோழர்கள் கூட, "பெயரை"ப் பற்றிய பிரச்னையிலிறங்குகிறார்கள். "உண்மைதான் சார்! திராவிடர்தான் ஆதிக்குடிகள். அவர்களது புகழும் கலாச்சாரமும் மிகமிகச் சிறந்தது என அறிவேன். ஆனாலும் ......" என்று, அதிருப்திக் குரல் கிளம்பும், அவர்களிடமிருந்து. அவர்கள், சிந்தனைக்கு, பாகிஸ்தான் சர்க்காரின் அடக்குமுறையால் சிறையில் கிடந்து வாடும் தீரர் கான்அப்துல்காபர்கான் அண்மையில் சிந்தியிருக்கும் சில வார்த்தைகளை, வைக்கிறோம். "இக்டாம்" எனும் பத்திரிகையாளர் எல்லை காந்தியாரை, சிறையில் பேட்டி கண்டு பக்டூனிஸ்தான் சம்பந்தமாகக் கேட்டாராம். அப்போது, அவர் தந்த பதில்:

"வடமேற்கு எல்லைப்புற மாகாணம் என்ற பெயரை பக்டூனிஸ்தான் என்று மாற்றவேண்டுமென்பதுதான் பக்டூன்களுடைய கோரிக்கை. பஞ்சாபிகள், ஸிந்திகள் வங்காளிகள் முதலியோர் தங்கள் மாகாணங்களுக்கு பஞ்சாப், ஸிந்து, வங்காளம் என்று பெயர்வைத்துக் கொண்டிருப்பதுபோல் பக்டூன்களும் தங்கள் மாகாணத்துக்கு பக்டூனிஸ்தான் என்று பெயர் வைக்கவேண்டுமென்கின்றனர்."

சிறையில் வதையும் எல்லைக்காந்தி காங்கிரஸ் கட்சியின் இரும்பு மனிதர்களில் ஒருவர். பாகிஸ்தான் பிரியக்கூடாது என்று போராடியவர். பாகிஸ்தான் பிரிவினை ஏற்படுவது அவசியம் என்ற நிலை ஏற்பட்டதும் மாச்சரியமோ மன வேற்றுமையோ கொள்ளாது, பாகிஸ்தான் பிரஜையாகவே தாம் வாழப்போவதாக அறிவித்துக்கொண்டவர். அத்தகைய பெருந்தகையாளர், பெயருக்கும் மக்களுக்குமிடையேயுள்ள ஆர்வத்தை விளக்கியுள்ளார்.

அவர் தரும் விளக்கத்தை இங்கேயுள்ள தேசிய இதழ்கள், ஆதரித்து எழுதியும் வருவதை நாம் அறிவோம்.

ஆனல், நாம் கூறினல்மட்டும் "கூடாது! கூடாது!" என்கிருர்கள்.

மனிதக் கூட்டம், தன்னுடைய புராதனப் பெருமையோடும் பெயரோடும் வாழ விருப்புவதில் தவறொன்றுமில்லை. மாபெரும் சாம்ராஜ்யமென உலகெங்கும் போற்றப்பட்ட ரோம் சாம்ராஜ்யத்தின கடைசி காலத்தில், அது இரண்டு பிரிவாகப் பிரியவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது — மேற்கு ரோமாபுரி. பைஸான்டைன் ராஜ்யம் எனும் பெயர்களோடு! தோள் தட்டி, வாள் காட்டி வாழ்ந்த ரோமாபுரி வீரர்களின் ஆதிக்கம், அராபியாவிலிருந்து அடித்த புயலால் வீழ்ந்த பின், அங்கேற்பட்ட புது நாடுகளின் தொகை அதிகமாயின. ரோம் சாம்ராஜ்யம், அகில உலகையும் கட்டியாள ஆசை கொண்டது, வலிமையும் பெற்றிருந்தது! ஆனல் பரந்த அதன் நிர்வாகம், பிறகு சிதறுண்டது. காரணம், அது பரந்து இருந்தமையால்தான்! அகண்ட, பரந்த பல சாம்ராஜ்யங்கள் அழிந்து ஒழிந்துபோயிருப்பதை, சரிதங்கள் நமக்குச் சொல்லும். ஜெகமெங்கும் புகழ் பரப்பிய மாவீரன் அலெக்சாண்டரின் கிரேக்க சாம்ராஜ்யம், இன்று, எங்கே? ஜூலியஸ் சீசர் கீர்த்திக் கொடி நாட்டிய இங்கிலாந்தும், எகிப்தும், பிரான்சும் இப்போது எப்படியிருக்கின்றன.

பரந்த சாம்ராஜ்ய ஆசையோடு 'புதுநாடு அமைப்பதா?' என்று ஆத்திரத்தோடு, கேட்கும் தோழர்கள் இதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பலமக்கள் இனங்களை ஒரே கூண்டில் அடைத்துப்போடும் வசதியை, வாளும் துப்பாக்கியும், சிலகாலத்துக்குத்தான் உண்டாக்கித்தரும். கட்டுப்பட்ட இனத்தோரிடையில், தாமும் வாழவேண்டுமெனும் ஆவல் துளிர்விடத்துவங்கினல் அதைத்தடுத்துவிட முடியாது! சமீபகாலம்வரை பாலஸ்தீனம் ஒரே நாடு. ஆனல் இப்போது! அங்கே இரண்டுநாடுகள். யூதர்கள் தமது மதப்பெயரைக்குறிக்கும் 'இஸ்ரேல்' ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்!

எனவே, புதுநாடுகளும், புது அரசுகளும் உண்டாவது அதிசயமானதோ, அல்லது ஆகாத காரியமோ அல்ல.

அவ்விதமமையும் புது நாடுகள், தமது அரசினை அமைப்பதும், சாதாரண காரியமாகும்.

இன்றும், எல்லைகாந்தி, சுட்டிக்காட்டியதுபோல் இந்திய சாம்ராஜ்யத்தில், அந்தந்த மொழிபேசும் மக்கள் பெயரால் மாகாணங்கள் இல்லாமலில்லை—வங்கம், பஞ்சாப் போல.

நாம் கோரும் திராவிட நாடு — திராவிடமக்களின் தாயகம். ஒரே இனத்தவர் வாழும் பிரதேசம்! இதற்கு, திராவிடநாடு, என்று பெயர் சூட்டினல் தவறென்ன? திரை இடம் என்பர், மூன்று பக்கமும் அலைகள் முரசொலிப்பதைக் காட்டி. திருஇடம் என்பர், அழகும் வளமும் செறிந்து விளங்குவதைக் குறிப்பிட்டு. இவ்வளவு பொருத்தமும் உள்ள பெயரினைச் சூட்டி, திராவிட மக்கள் வாழும் இத் திருவிடத்தை, தனிநாடாக்குவது எவ்விதத்தில் பொருந்தாது? ஏன் முடியாது?

★

முன் பக்கத் தொடர்ச்சி

தாரர்கள் சட்டத்தைக் குறிப்பிட்டு, "பண்ணையாளருக்குப் பயப்படுவோரல்ல காங்கிரஸ் சர்க்கார். பார்த்தாயா, எமது ராஜாஜியின் துணிவை!" என்று ஆனந்தத்தோடு பேசுவர் — குத்தகைதாரர்கள் சட்டம் பிரமாதமான காரியம் எனும் நினைவோடு.

"குத்தகைதாரர் சட்டத்தால், பண்ணையாளருக்கு ஏற்படும் பாதகமெனனப்பா?;' என்று நாம் கேட்டால், "குதர்க்கவாதிதானே நீ! கொட்டமடிக்கும் நிலப் பிரபுவை மட்டந் தட்டும் மாபெரும் காரியமன்றோ அது" என்று, கனல் கக்கப் பதிலிறுப்பர்.

"பதறுதே நண்பா! பண்ணைக்காரர்களிடம் இருக்கும் ஆயிரக் கணக்கான ஏக்கரை, உழைக்கும் ஏழைக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் என்ன?"

"அதெப்படியப்பா முடியும்? ஒருவர் நிலத்தைப் பிடுங்கி, பிறருக்குத் தந்துவிடலாமோ! நமது நாட்டு நிலப் பிரபுக்கள் சும்மா விட்டுவிடுவார்களோ. சுயராஜ்யம் சீர்குலைந்துவிடாதோ!" என்று, நமது கேள்விக்கு, கம்மிய குரலில் பதில் தருவர்.

"உழைப்பவனுக்கு நிலம்" எனும் கொள்கையை, கொஞ்சம் கொஞ்சமாகத்தான் கொண்டுவரவேண்டும், இப்போது சட்டம் பிறப்பித்தால் சுயராஜ்யம் துண்டு துண்டாகிவிடும். மிராசுதாரர் எதிர்ப்பர், என்பதாகவெல்லாம் பேசுவர். அவர்களுக்கு அண்மையில் புதுமலர்ச்சி பெற்ற எகிப்து செய்திருக்கும் வழியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

200 ஏக்கர்களுக்குமேல் தனிப்பட்ட எவருக்கும் நிலம் கிடையாது.

என்றோர்சட்டம்பிறப்பித்து, அமுல் நடத்தி வருகிறார், நகீப். சிலரிடத் தேங்கிக்கிடந்த ஆயிரமாயிரம் ஏக்கர் நிலங்களைப்பிடுங்கி, உழைப்பவனுக்கு பங்கிட்டுக்கொடுத்துள்ளார். அந்தத் துணிவு, ஏழைபங்காளரெனப் பேசும் இவர்களுக்கேன் ஏற்படவில்லை? மக்கள் தலைவர் அல்ல நகீப்! அவர் செய்கிறார் — ஆனல் மக்களின் முடிசூடாமாணிக்கங்களாம் இவர்கள் ஏன் செய்யவில்லை? இதுபோன்ற சீர்திருத்தங்களைக்கொணர்ந்தால் மிராசுதார்கள் எதிர்ப்பர் என்கிற பயமா! ஆம் எனில், அந்தப்பயம் நகீபுக்கு இல்லையே? அவர் சாதாரண ராணுவத் தளபதிதானே!

"அங்கெல்லாம் செய்துவிடலாம். இந்தியாவின் புராதன முறைகள் வேறு. இங்கே எதையும் செய்துவிடமுடியாது" என்று வழக்கமான பாணியில் பேசுவரா! அல்லது "நமது மிராசுதாரர்கள் சர்க்கார் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு நடக்க மாட்டார்களே என் செய்வது?" என்று சொல்லிவிடமுடியுமா! நகீப், மேற்படி சட்டத்தைப் பிறப்பித்ததும், அநேகமாக எல்லா நிலப்பிரபுக்களும் தாம் அனுபவித்து வந்த ஆயிரமாயிரம் ஏக்கரையும் ஒப்படைத்துவிட்டனர். ஆனல் ஒரே ஒரு பிரபுமட்டும் அதுபோலச் செய்யவில்லை. சர்க்காரைப்பார்த்து முறைத்தார்! 'முடியாது' என்றார்;

பெரிய நிலப்பிரபு அவர். பெயர் அலைட்லாம்லம் என்பது. துடிக்கும் வயதினர்! 25 வயதுடைய சீமான். எகிப்திய பார்லிமெண்டின் முன்னாள் மெம்பர். ஏகபோகத்தில் 1800 ஏக்கருக்கு அதிபதி. "ஒரு பயலும் என் நிலத்தைத் தொடவிட மாட்டேன்!" என்று கர்ஜித்தார். சர்க்கார் போலீசை அனுப்பிற்று! தாக்கினர்.—பல எடுபிடிகளைச் சேர்த்துக் கொண்டு. "சொத்து என்னுடையது. சர்க்காரேநெருங்காதே!" என்று, அலறினர். இளமைப் பருவமல்லவா — எதிர்க்கத் துணிந்தார் அரசாங்கத்தை. ஆனல், அந்த வெறியரின் துடுக்கையடக்கி சிறைக்குள் தள்ளி விட்டது நகீப் ஆட்சி! "வாழ்க்கை முழுவதும் உனக்குச் சிறைத்தண்டனை. சிறையில் கடுங்காவல் அனுபவிக்க வேண்டும். நெற்றிவியர்வைசிந்தித்தினம்உழைக்க வேண்டும்" என்று கடுமையான தண்டனை தந்து, விட்டது. "என் சொத்து!" என்று, விதண்டாவாதம் பேசிய, நிலப்பிரபு, காராக்கிரகத்தில் கிடக்கிறார். "துடியிடையையும் பவளச் செவ்வாய்களையும் பதம் பார்ப்பதே என் வாழ்வு, பாரில் நடைபெறும் எந்தப்புதுமையும் என்னைப்பாதிக்க விடமாட்டேன்!"—என்றுகர்ஜித்த லாம்லம், இன்று மண்வெட்டி ஏந்தி, காவலாளிகள் மிரட்ட, வியர்வையைச் சிந்திக் கொண்டிருக்கிறார்!

சர்க்காரை எதிர்த்த பண பிம்பத்துக்கு நகீப் ஆட்சி, தந்திருக்கிறது இந்தச் சவுக்கடியை.

இதுபோன்ற சவுக்கடி பெற்றால், தனியுடைமை பேசும் எவர்தான், பணியாமலிருப்பர். கொள்ளை லாபக்காரனும், அதிக விலைக்கு நெல் விற்கும் பண்ணையாளனும், அடுத்த நாளே தம்மிடம் இருப்பதைச் சர்க்காரிடம் ஒப்படைத்து விட்டு சரணாகதியல்லவா, அடைவர்!

எகிப்து, கூறுகிறதே இந்தப் பாடத்தை! இவர்கள் ஏன், அவ்வழி புகவில்லை?

நகீபுக்கு ஏற்பட்ட துணிவு நம்ம சர்க்காருக்கு உண்டாகாத காரணம் என்ன?

"எல்லாம் உண்டு; எமக்குத்தான் இல்லை!" என்று வேதனைக் குரல் எழுப்பிய மக்கள் குரலைக் கேட்டார், நகீப். மாறுதல்களைச் செய்கிறார்—துணிவோடு.

அதே வேதனைக் குரலைத்தானே நமது நாட்டிலும் கேட்கிறோம். நகீபுக்கு ஏற்பட்ட துணிவு, சுயராஜ்ய வீரர்களுக்கு உண்டாகியிருக்கவேண்டாமா! ஆசியாவின் ஜோதி என்கிறோம்—பண்டிதரை. சிறந்த மேதை என்கிறோம் — ஆச்சாரியாரை. 'மக்கள் இருதயத்தில் விளங்கும் மாணிக்கங்கள்' என்று படம் போட்டுப் பிரசுரிக்கிறோம். ஆனல், நகீப், இந்த விளம்பரம் எதுவும் இல்லாதவர். அவர் செய்கிறார்! ஆனல், மக்கள் தலைவர்கள் பயப்படுகிறார்கள்!!

புலி — எகிப்தில் அடக்கப்படுகிறது. இங்கே, பெருமிதத்தோடு உலவுகிறது.

இதற்கு என்ன காரணம்? ஏழை கதறுகிறன்! அவன் கண்ணீரைத் துடைக்கவில்லை, காங்கிரஸ். பணக்காரனின் பட்டு மெத்தையில் பன்னீர் தூவப்படுகிறதா என்று அதி சிரத்தையோடு, பாதுகாக்கிறது.

இத்தகைய மனோபாவம் கொண்ட அரசியல் தலைவர்களை நாம் பெற்றிருக்கிறோம். அவர்களுக்கு மாலை சூட்டுகிறோம்! ஜயந்தி கொண்டாடுகிறோம்! பிரசங்கமாரிகளைக் கேட்கிறோம்! 'ஜே! ஜே!' எனக் கத்துகிறோம்! ஆனல், அவர்கள், நாட்டுக்குத் தரும் பரிசு— ஏமாற்றம்! பஞ்சம்! தொல்லை!

இத்தகைய தலைவர்களைப்பெற்றிருக்கும் காங்கிரஸ் சர்க்காரை எவ்விதம், மக்கள் சர்க்கார் என்று கூற முடியும்? எகிப்து, இல்லையே இங்கு! மக்கள் குரல்—அங்கே நகீபுக்குக்கேட்டது. இங்கே, கேட்பதில்லையே! இத்தகைய மதோன்மத்தரைக் கொண்ட காங்கிரசால் என்ன வாழ்வு கிடைக்க முடியும் ஏழைகளுக்கு? எப்படி, இந்தநாடு வாழமுடியும்? "எல்லாம் உண்டு— எமக்கு இல்லை!" என்று, மக்கள் வடித்த கண்ணீர் சிறு நாடு எகிப்தில், சிலமாதங்களில் துடைக்கப்படுகிறது! மாபெரும் பாரதபூமியில் வருஷம் ஐந்து ஆகியும் கண்ணீர் பெருகுகிறதேதவிர, துடைக்கப்படவில்லை!! இத்தகைய "திருவாளரை" ஆட்சியாளராகப்பெற்றிருக்கிறோம்! என்றுதான் நல்வாழ்வோ! கண்ணீர் அடங்குமோ!!

★

# பகுத்தறிவு இருந்தால்.........!

[அடிகள்]

[இன்றைய உலகம் ஓரளவுக்கு விழிப்படைந்து விட்டதென்ற போதிலும், எங்கோ இருக்க வேண்டியவர்களை ஆட்சிப் பீடத்தில் ஏற்றி 'பஜகோவிந்தம்' பாடச் செய்யும் 'அறிவாளிகளும்' இன்னும் இருப்பதால் இத்தகைய கட்டுரைகள் ஒவ்வொரு சமயத்தில் தேவைப்படுகின்றன.]

இந்த உலகத்தையும் இவ்வுலகிற் காணப்படும் உயிர்ப் பொருள் உயிரில் பொருளாகிய அனைத்தையும் கடவுள் ஒருவரே படைத்தார். ஆகையால், கடவுள் நெறியைக் கூறும் மத நூல்களைப் பின்பற்றி அக்கடவுளை வழிபடுதலே முறையாம் என்று கூறுவதாயின், அது பொருந்துவதாயில்லை. ஏனென்றால கடவுளைப் பற்றிக் கூறும் இந்துமத நூல்களெல்லாம் கடவுள் இத்தகையினர் என்று அளவிட்டுச் சொல்லுதலே பெரும் பாவம் என்று முடிவுகட்டிக் கூறியுள்ளன. ஆகையால், அரைகுறையாக நாம் அறிந்த அளவில் வைத்துக் கடவுளை வழிபடுவது, அரைகுறையாகக் காட்டப்பட்ட ஒரு கட்டிடத்தில் குடி புகுவதையே ஒக்கும். அரை குறையாகக் கட்டப்பட்ட கட்டிடத்தில் குடிபுகுந்த ஒருவன் மழை வெயில் முதலானவற்றினல் துன்பப் படுவதோடு, அவனுடைய பொருள்களும் திருடரால் கவரப்பட்டு, அவன் அம்பலத்தில் நின்று தவிக்க வேண்டியும் வரும். அந்நிலையைத்தான் அரைகுறையாக அறிந்த கடவுளை வழிபடுபவனும் அடையுமுடியும். சிவஞான போதம் முதல் பெரிய புராணம் ஈறாகவுள்ள இந்துமத நூல்கள் எல்லாம் 'உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்' என்ற முடிவைத்தான் கிளந்து கூறுகின்றன. இனிச், சைவமதத்திற்குத் தயகமாயுள்ள சிவஞான போதத்தைப் பற்றிய கருத்துக்கள் சைவர்களாலேயே இன்னும் முடிவு செய்யப் பெறவிலலை. அவர்களில் ஒரு சாரார் அதனை வடமொழி நூலென்றும், இன்னொரு சாரார் அதனைத் தமிழ் நூலென்றும் இன்னும் வழக்காடிக் கொண்டிருக்கின்றனர்.

இனி, மக்கள் பகுத்தறிவோடு கூடியவர்களாதலால், அவர்கள், கடவுளை மத நூல்களிற் கூறியபடி வழிபடா தொழிதல் குற்றமாம் என்று கூறுவாருரையும் பொருந்தாததாகவே இருக்கின்றது. பகுத்தறிவைக் கடவுள் பழிபாட்டுக்குத் தான் பயன்படுத்த வேண்டுமென்பது மத நூலார் கொள்கையே யன்றி, அறிவு நூலார் கொள்கையன்று. பகுத்தறிவற்ற செடி கொடிகளும், காக்கை கரிக்குருவி நாரைகளும், நாய் பன்றி முதலிய விலங்குகளும் கடவுளை வழிபட்டுப் பிறவாமையைப் பெற்றிருப்பதாக இந்துமத நூல்கள் நுவல்வதால், பகுத்தறிவு கடவுளை அறிந்து வழிபடுவதற்கென்பது பொய்யுரையாம்என்று ஒழிக. பின், பகுத்தறிவென்பது எற்றுக்குப் பயன் படுவதென்றால், நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து, கெட்டதை நீக்கி நல்லதைக்கொண்டு தம் வாழ்க்கையைத் தன் மதிப்போடும் நேர்மையாகவும் நடத்திச் சென்று, அதனல் தாமும் பிறரும் நற்பயன் எய்துதற்கேயாம்.

மக்களின் அறிவோடு பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டுள்ள நிறைந்தபொருளாகியகடவுளை (அறிவை)த் தம்மின் வேறாய்ப் பிரித்து அதற்கு வடிவம் முதலியன உண்டாக்கிப் பின் அதனை அழித்தலே பெரும் பாவமென்றும், அத்தகைய பாவம் எக்காலத்திலும் நீங்காதென்றும் சொல்லப்படும் மதஉண்மையைக்,கடவுளிடத்து நீங்கா அன்புடையவர்கள், தங்களுடைய பகுத்தறிவுடன்பொருந்தவைத்துப்பார்ப்பார்களாயின், அவர்கள் கடவுளிடத்து வைத்துள்ள போலிப் பற்றினின்றும் விடுபட்டு மக்கட் பண்போடு உலகில் வாழ்வர் என்பது திண்ணம்.

எவரெவர் உண்ட உணவுகளை எல்லாம் அவரவர் வயிற்றுக்குள் இருந்து செரிக்கப்பண்ணும் நெருப்புக்கு அசீரணம் பிறந்ததென்று கருதி, அது நீங்குவதற்குச் சுக்கு அரைத்துக் கொடுத்து, அதனல் குளிர் பிறந்ததென்று வைக்கோல் போட்டு மூடுவதுபோலவும், மலையின்கீழ் அகப்பட்ட ஒருவன் படுந் துன்பம் போலவும், நீரை நீரினற் கழுவுதல் போலவும், நிழல் மீது மண்ணைப்போட்டு அதனை மறைக்க முயல்வதுபோலவும், எங்கும் நிறைந்து அறிவாய் விளங்கும் கடவுளுக்கு யாதோ குறை உளது போற் கருதிக் குளிப்பாட்டிப்—பொங்கல் படைத்து—மந்திரம் சொல்லி—மரியாதை செய்து வழிபாடு செய்யவேண்டியதும் இல்லை. அங்ஙனம் செய்வோரை மக்கட் கூட்டத்தில் வைத்து எண்ணப்படாதென்பதற்காகவே, அத்தகையினரை 'யாரைப் போல்வார் என்னில்லாம்' என்று சைவமத நூலாசிரியர் ஒருவர் பெரிதும் இரக்கப்பட்டுக் கூறியிருப்பது நோக்கற்பாலது. இங்ஙனம் அறியாமை வாய்ப்பட்டுக், கடவுளை அறியவேண்டி அங்கும் இங்கும் ஓடித்திரிந்து தம் வாழ்நாளைப் பாழாக்கும் மக்களின் இரங்கத்தக்க நிலையைக் கண்டே, அறிவுடையோர்,

> "கூலித் தொழிலாளர் கொண்டு விற்போர் போன்ற குரு வேலைப் பகிடிகளை மேவாதே........."

என்றும் கூறிப்போந்தனர். அதாவது, வேலை செய்து கொடுத்துக் கூலிவாங்கிக் கொள்ளும் கூலித் தொழிலாளரைப் போலவும், ஒரு பண்டத்தை வாங்கும் பண்ட மாற்றுத் தொழில் செய்வோராகிய வணிகரைப் போலவும், ஒரு கூட்டத்தார் தங்கள் பிழைப்புக்காக, கடவுளைப் பற்றி இல்லாதனவும் பொல்லாதனவுங் கூறி, மக்கள் பாடுபட்டுத் தேடிய பொருள்களைப் பறிப்பதற்காகத் தாங்கள் மத குருமார் என்று சொல்லிப் பகிடிக்கூத்தாடி, மக்களை ஏமாற்றுகின்றனர், ஆகவே அவர்களை நம்ப வேண்டாமென்றும் அத்தகையினரை அணுகவேண்டாமென்றும் அறிவுடையோர் முன் கூட்டியே நமக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றனர் என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இனி, அந்நியர்கள் நம் நாட்டில் வந்து குடியேறுவதற்குமுன், அதாவது இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் நாடு எத்தகைய சிறந்த நிலையில் இருந்ததென்பதைப் பழைய சங்க நூல்களாலும், ஆரியர்கள் நம் நாட்டுக்கு வந்த காலந்தொட்டு ஆங்கிலேயர் நம் நாட்டுக்கு வந்த காலம் வரையிலுள்ள காலம் எத்தகைய கீழ்நிலையை அடைந்திருந்ததென்பதை அக்காலத்தில் எழுதப்பட்ட மத புராணக்கதைகளாலும் நன்கறியலாம். புராணங்களில் காணப்படுவது போலக், கடவுள் இடபத்தில் ஏறிவந்தார், எலிமீதேறி அசைந்து வந்தார், மயில் கருடன் முதலியவற்றில் ஏறிப்பறந்து வந்தார், சடைமுடியோடும் பூணூலோடும் நடந்து வந்தார் என்றாவது, தந்தையைக் கொன்றவனுக்கு முத்தி, தாயைப் புணர்ந்தவனுக்கு மோட்சம், நம்பிக்கை மோசம் செய்தவனுக்குப் பதவி கொடுத்தார் என்றாவது சங்க நூல்களில் காணமுடியுமா? மற்றுச், சங்க நூல்களில் எல்லாம், அக்காலத்து மக்களின் சீரிய வாழ்க்கையின் சிறப்பையும், அவர்களின் நாகரிக மேம்பாட்டையுந்; குடிமக்கட்குரிய கடமையையுஞ், சொல்லேர் உழவர்களின் நல்லெழில் வாழ்க்கையையும்; அரசரின் போர்த்திறத்தையும், அவர்களின் நடுநிலைமையான அரசு முறையையும்; 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உண்மையையும்; 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்ற ஒற்றுமையின் மேதக்கபண்பையும்இன்ன பிற செம்மை நெறியையுந்தான் நாம் காண்கிறோம். எனவே, பழைய சங்க நூல்களில் மக்களின் அரும் பெருஞ் செயல்கள் வியந்து கூறப்படுதலையும், ஆரியர் காலத்தெழுந்த புராணங்களில் கடவுளைப் பற்றியும் இந்து மதத்தைப் பற்றியும் கூறி மக்களின் அறிவைப் பாழ்ப்படுத்தியிருத்தலையும் ஒப்புநோக்கிப் பார்ப்பவர் நாம் கூறும் உண்மையை மறுக்கவோ அன்றிப் 'புராணங்களை அழிக்கலாமா' என்று பதட்டத்துடன் கூறவோ முன்வர மாட்டார்கள் என்பது துணிபு.

'இனிப், புராண கால நிகழ்ச்சிகள் இக்காலத்திலும் நடைபெறுமாயின் அரசினர்' "இவை எல்லாம் கடவுளின் திருவிளையாடல்கள்" என்றெண்ணி வாளா இருப்பார்களா? அல்லது கொலை புரிந்தவனைத் தூக்கிலிட்டும், மோசம் செய்தவனைச் சிறையிலடைத்தும் அவனவன் செய்த குற்றத்திற்கேற்ற பரிகாரந் தேடுவார்களா? என்பதையும் எண்ணிப் பார்ப்பவர்கட்கு, இந்து மதத்தின் பேரால் செய்யப்படும் பித்தலாட்டங்கள் விளங்காமற் போகாது. மற்றுப், புராண கால நிகழ்ச்சிகள் எல்லாம் உண்மையாகவே நடந்தன என்று கூறுவோமாயின், இக்காலத்தில் ஏன் அங்ஙனம் நடப்பதில்லை என்ற கேள்வி பிறக்கின்றது. அன்றியும் புராணகாலக் கடவுள் இப்போதில்லையென்றோ, அல்லது இன்றைய விழிப்படைந்த நிலைமைக்குப் பயந்து அக்கடவுள் தம்முடைய

---

## தேனிக் கலவர வழக்கு நிதி

| | ரூ. அ. ப. |
|---|---|
| முன்னைய வரவு | 1294—0—1 |
| சென்னை மாவட்ட தி. மு. க. | 100—0—0 |
| தி. மு. க. பொதுக் கூட்டம் குடந்தை | 5—0—0 |
| ,, திசையின்விளை | 5—0—0 |
| ,, பொதுக்கூட்டம் பம்பாய் | 5—14—0 |
| ,, சிந்தாதிரிப்பேட்டை கிளை | 8—0—0 |
| கழகஅனுதாபிகள் பூனு | 13—0—0 |
| பூங்கோதை இளங்கோவன், மாணிக்கம் | 5—0—0 |
| சீனித்துரை தம்பதிகள் மதுரை | 4—0—0 |
| தி. மு. க. ராமநாய்க்கன் பட்டி | 0—8—0 |
| சிங்காரவேலர் படிப்பகம் மதுரை | 1—0—0 |
| ஐ. மு. படிப்பகம், அனுப்பானடி | 1—9—0 |
| தி. மு. க. கொள்ளிடம் | 2—0—0 |
| ஒரு தோழர் ஆமதாபாத் | 1—0—0 |
| கங்கம்மாள், ரெங்கநாதன் புளியங்குடி | 1—0—0 |
| தி. மு.க. குள்ளம்பட்டி | 5—0—0 |
| தி. மு.க. ஆமதாபாத் | 24—0—0 |
| கம்பம் நாடகம் மூலம் | 1063—9—9 |
| தி. மு. க. விளாம்பட்டி | 2—0—0 |
| அ. ப. வைத்திலிங்கம் குறிஞ்சிப்பாடி | 5—0—0 |
| தா. சேசப் ரங்கூன் | 2—0—0 |
| தி. மு. க. கறம்பக்குடி | 2—1—0 |
| எம். எஸ். சவுரிமுத்து ராயப்பன்பட்டி | 100—0—0 |
| எம். முத்துச்சிதம்பரம் காமபக்கவுண்டன்பட்டி | 10—0—0 |
| ரத்ன தொழிலாளர் திருவல்லிக்கேணி | 4—0—0 |
| தோழமைக் கழகம் சென்னை | 150—0—0 |
| வெள்ளனூர் தி. மு. க. | 5—0—0 |
| தி. மு. க. வெங்கடாசலபுரம் | 0—12—9 |
| தி. மு. க. கோமாக்குடி | 5—0—0 |
| தென்கரை பெரியகுளம் தோழர்கள்: ஜி. காதர் மைதீன், கே. அபிபுல்லா, ஏ. முகம்மது முஸ்தாபா, பி. ஏ. அப்துல் சக்கர், பி. அப்துல் ரசாக், பி. அசன் முகம்மது | 6—10—0 |
| தி. மு. க. பொதுக் கூட்டம் தேனி | 2—0—0 |
| ,, ஓடப்பட்டி | 10—0—0 |
| ,, தப்புக்குண்டு | 5—0—0 |
| ,, வெள்ளையம்மாபுரம் | 1—3—3 |
| | 2850—3—10 |

## வேண்டுகோள்

அன்புடையீர்!

வணக்கம். தேனிக் கலவரம் பற்றிய உண்மையை நீதியின் மூலம் நிலைநாட்டி, தி. மு. கழகத்தின் தூய்மையை உலகுக்கு வெளிப்படுத்த நீதிமன்றம் ஏறி வழக்காட முற்பட்டோம். பொது மக்களின் ஆதரவை நாடினோம். மேற்கண்ட அளவுக்குத் தந்தார்கள். இதுவரை முப்பதுக்கு மேற்பட்ட வாய்தாக்கள் போடப்பட்டு, ஒத்திவைக்கப் பட்டுக் கொண்டே வருகின்றது. வழக்கு இன்னமும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. பொதுமக்கள் தந்த நிதியெல்லாம், வழக்கு வழுக்கிப் போகாமல் நிலைநாட்டுவதற்கென்று எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கே செலவழிந்து விட்டன. இப்பொழுது கைப்பொருளின்றி வழக்குக் குழுவினர் தவிக்கின்றனர். எடுத்த முயற்சியை வெற்றிகரமாக்கிக் காட்ட இன்னும் பல ஆயிர ரூபாய்களும், பொதுமக்களின் ஒத்துழைப்பும் மிகமிகத் தேவைப்படுகின்றது. தேனிக் கலவர வழக்கு நிதியை வளப்படுத்தி அதன்மூலம் வழக்கை வலுப்படுத்த கழகத் தோழர்கள் ஊக்கமும், உணர்ச்சியும் காட்ட வேண்டிக்கொள்கிறேன். ஆங்காங்குள்ள கிளைக்கழகங்களும், கழகத் தோழர்களும் நிதி திரட்டித்தரும் பெரும்பணியினை,பெருமிதத்தோடு செய்துதர, முன் வருமாறு பெரிதும் வேண்டிக் கொள்கிறேன். உங்கள் முயற்சி, வழக்கின் வெற்றி! எனவே கடமையாற்ற வேண்டுகிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர்
தேனிக்கலவரவழக்கு நிதிக் குழு

திருவிளையாடல்களைச் செய்யாமல் இருக்கிறரோ என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. ஒன்று, புராணங்கள் பொய் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; அல்லது கடவுளைப்பற்றி நாம் கூறும் உண்மைகளையாவது ஒப்புக்கொள்ளவேண்டும். இத்தகைய சிக்கல்களைப் பிரித்தறிந்து உண்மை காணுவதற்காகத்தான் பகுத்தறிவு என்ற ஒரு தனியறிவு மக்களிடம் காணப்படுகின்றது. அதனைப்பயன்படுத்தி உண்மை காண்பதுதான் மக்கட்பண்பாகும். பண்டைத்தமிழ் மக்களின் பண்பு பெற்றவாழ்க்கையைத்தான் இன்று மேல்நாட்டவர் கைக்கொண்டு தாங்கள் பண்பு பெற்ற வாழ்க்கையி (Cultured Life)ல் இருப்பதாகப் பெருமைபடித்துக்கொள்கிறர்கள். இங்ஙனம் தமிழ்மக்களின் நல்லொழுக்கங்கள் எல்லாம் பிறரால் கையாளப்பட்டு அவர்கள் எல்லாரும் தம் வாழ்க்கையை வறுமையும் கவலையுமற்ற முறையில் நடத்தி மேன்மை பெறவும், தமிழர்கள்மட்டும் தங்கள் உரிமைகள் அனைத்தையும் இழந்து வறுமையுங் கவலையுமுற்று, எடுப்பார் கைப்பிள்ளைகளாய், 'நமக்கு இந்து மதம் வழிகாட்டும். கடவுள் அருள் செய்வார்' என்று, கள்ளக் காதலனை நம்பிக்கட்டிய கணவனைக் கைவிட்ட ஒரு பேதைப் பெண் போலத் தங்கள் அறிவையிழந்து நிற்கும் நிலையைக் காணும்போது தான் நாம்உண்மையிலேயேவருந்துகிறேம்.

இனி, இந்து மதத்தை நிலைநாட்ட எழுந்த நூல்களெல்லாம் சிறப்பாக, மக்களை நல்வழியில் ஒழுகச் செய்து அவர்களை மோட்சம் அதாவது பிறவாமையை எய்துவிப்பதே அவற்றின் நோக்கமென்றும் சொல்லப்படுகிறது. அதனையும் ஒரு சிறிது ஆராய்வாம். இந்து மதம் மற்ற மதங்களுக்கெல்லாம் காலத்தால் முந்திய தென்று சொல்லப்படுகிறது. "இவ்வுலகிலுள்ள மத நூல்களில் மிக முந்தியது இந்துமத இருக்கு வேதமே" என்பது வடமொழிப் பேராசிரியரான மாக்ஸ் மூலர் (Max Muller) என்ற மேனாட்டறிஞரின் கருத்தாகும். எனவே, ஜோதிட நூற் கணக்கின்படி உலகந்தோன்றி 192 கோடி ஆண்டுகள் கழிந்து விட்டன வென்பதை உண்மையென்று நம்பி அதன்படி ஆராய்ச்சி செய்யா விட்டாலும், இருக்குவேத காலத்தையே மதம் தோன்றிய காலமாக வைத்து ஆராய்ந்து பார்த்தாலும், இந்துமத நூற்கொள்கையின்படி இந்துக்களிற் பெரும்பாலார் பிறவாமையாகிய மோட்சத்தைப் பெற்றிருக்க வேண்டும். அப்படிப் பெற்றிருந்தால் இந்துக்கள் தொகையில் குறைந்திருக்க வேண்டும். ஆனல் பத்துக்கோடியாக இருந்த இந்துக்கள் இன்றைக்கு இருபத்திரண்டு கோடியாகப் பெருகியிருக்கின்றனர். பொதுவாக எல்லா மதங்களையுஞ் சேர்த்துப் பார்த்தாலும் பதினறு கோடியாக இருந்த இவ்இந்திய மக்கள் இன்றைக்குமுப்பத்தாறுகோடியாகப் பெருகியிருக்கின்றனர். இந்துக்களாய்ப் பிறந்தாலும், அவர்களுக்கு எளிதில் பிறவாமையாகிய பேறு கிடைத்து விடுவதில்லை, ஏதோ ஆயிரத்துக் கொருவர் பதினயிரத்துக் கொருவர் தான் பிறவாமையைப் பெறுகின்றனர் என்ற இந்துமத நூற் கொள்கையின்படி பார்த்தாலும் தொகை குறைய வேண்டு ?மயன்றிப் பெருகக்காரணமில்லை. ஆனல், மக்களல்லாத பிற உயிர்களெல்லாம் அந்தந்தப் பிறவி கொண்டு பிறவாமையைப் பெற முடியாது, மக்களாய்ப் பிறந்துதான் அப்பேற்றை அடைதல் கூடும். ஆகவே தான் மக்களின் தொகை பெருகிக்கொண்டு வருகின்றதென்று கூறுவது பொருந்துமாறில்லை. ஏனென்றல், மக்கள் மட்டும் பிறவாமைப் பேற்றை அடைவதில்லை, மக்களல்லாத விலங்கு பறவை செடி கொடி முதலானவைகளும் பிறவாமைப்பேற்றை அடைந்துள்ளன வென்று இந்து மத நூல்கள் கூறுவது ஒருபுறமிருக்க, விலங்கு பறவை செடி கொடி முதலியவைகளின்தோற்ற வளர்ச்சிகளை ஆராய்ந்த அறிஞர் பலர், அவைகளும் தொகையிற் பெருகிக் கொண்டு வருகின்றன வென்றே கூறுகின்றனர். ஆகவே, எப்படிப் பார்த்தாலும் உயிர்களின் தொகை பிறவாமைப் பேற்றைக்காரணமாகக் கொண்டு குறைந்திருப்பதாகத் தெரியவில்லை. அன்றியும் உயிர்கள் பிறந்திறப்பதைக் கண்கூடாகக் காண்கின்றேமேயன்றி, உபமன்னியுமா முனிவர், போன்றவர்கள் சுந்தரமூர்த்திநாயனர் பிறவாமையைப் பெற்று வெள்ளையானையில் ஏறி வான் வெளியில் சென்றதைக் கண்டதாகச் சொல்லப்படும் காட்சிகள் எதையும் 'சினிமா' என்று சொல்லப்படும் படக்காட்சிகளிலன்றி வேறெந்த வகையிலும் இப்போது நாம் காண முடிவதில்லை. காரணம், நாம் எல்லரும் மாயையினல் மறைக்கப்பட்டிருக்கிறேம் என்பதே. ஆகவே, இக்காலத்தில் கடவுள் ஒருவருக்கும் நேரில் வந்து காட்சி அளிப்பதில்லை என்பது முடிவாகிறது. என்றலும், கடவுளை நேரில் கண்டு எந்தக் காலத்திலும் இறவாத வரத்தைப் பெற்று இன்றும் உயிரோடு இருப்பதாகச் சொல்லப்படும் மார்க்கண்டேயர், அநுமார் முதலானவர்களைக் கண்டாவது கடவுளைப்பற்றிய புதுமைகளைக் கேட்டறியலாமென்றலோ, அவர்களுடைய இருப்பிடமும் நமக்குத் தெரியவில்லை. இதுவும் மாயையின் திருவிளையாடல்போலும்!

எனவேதான் நாம், இக்காலத்தில் இந்துமதக் கடவுளைப்பற்றியும் இந்து மதத்தைப்பற்றியும் மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை யென்றும், தமிழருக்கு அன்பும் அறிவுமே கடவுளென்றும், உபமன்னியுமாமுனிவர் போன்றவர்கள் தோன்றி இந்துமதக் கடவுளை நேரில் காட்டியபின், வேண்டுமானல் இந்துமதக் கடவுளைப்பற்றியும் அம்மதத்தைப்பற்றியும் நாம் கவலை எடுத்துக்கொள்ளலாமென்றும், இப்போது மக்கள் தங்கள் அறிவையும், உழைப்பையும், பொருளையும் தங்கள் அன்றட வாழ்க்கைக்குப் பயன்படுத்தித் தாமும் தம்மைச் சார்ந்தாரும் நோயும் வறுமையுங் கவலையுமற்ற திருந்திய செல்வ நிலையில் இருந்து, எல்லோரும் நம்மைப்போலவே வாழவேண்டும், எந்தத் துறையிலும் ஏற்றத் தாழ்வு இருக்கக்கூடாது, யாவரும் சமம் என்ற உயர்ந்த பண்பை உள்ளத்தில் என்றும் கொண்டு ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற மெய்யறிவோடு வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டுமென்றுங் கூறுகின்றேம்.

★

## தோழர்களே!

கழக நிர்வாகிகள் தேர்தல் செய்திகளை, தலைமைக் கழகத்துக்கு அனுப்பக் கோருகிறேம். தலைமைக் கழக அங்கீகாரம் பெற்ற செய்திகள் மட்டுமே, "திராவிடநாடு" இதழில் பிரசுரிக்கப்படுகின்றன. இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள்: பொறுப்பாளர் தி-மு. க. தலைமை நிலையம், 'அறிவகம்' ராயபுரம் சென்னை என்ற முகவரிக்கு எழுதிக்கொள்ளவும்.

## புத்திசாலித்தனம்

புத்திசாலித்தனம் என்பது என்ன?

புத்திசாலித்தனம் என்பது அடிப்படையில் ஒருவன் தன்னுடைய பழைய அனுபவங்களை அவ்வப்பொழுது எழும் பிரச்னைகளை வெற்றிகரமாகச் சமாளிக்கப் பயன்படுத்துவதும் புதியபிரச்னைகளை எதிர்பார்ப்பதுமே யாகும்.

ஆனல் அறிவுக்கும், புத்திசாலித்தனம் அல்லது அறிவுக் கூர்மைக்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. ஏதோவொன்றைப் பற்றிய விவரங்களைத் தெரிந்திருப்பது அறிவு. ஆனல் அறிவுக் கூர்மை அந்த அறிவைப் பயன்படுத்தும் திறமையாகும். ஒவ்வொன்றையும் எடைபோட்டு மதிப்பிடும் திறமையே அறிவுக் கூர்மையாகும்; புத்திசாலித்தனமாகும்.



# திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் ★ புது நிர்வாகிகள் ★

## கோவை மாவட்டம்

**செம்மாண்டம்பாளையம்**

செய: வி. கே. கலைமணி, துணை: எஸ். கே. குப்புசாமி, பொருள்: வீ. குமாரசாமி, மாவட்டப்: எஸ். க. முத்து.
செயற்குழு 11 பேர்.

**பருமாநல்லூர்**

செய: பி. எம். கிருஷ்ணசாமி, துணை: பி. கே. சுந்தரம், பொருள்: ம். நடேசன், மாவட்டப்: எஷ். வானந்தம்.
செயற்குழு 10 பேர்.

**காடுவாய்**

செய: கே. பி. ராமசாமி, துணை: . பழனிச்சாமி, பொரு: மு. நடேன், மாவட்டப்: கே. எஸ். ராசன்.
செயற்குழு 13 பேர்.

**ரப்பன்சத்திரம்**

செய: வி. கே. மாரிமுத்து, துணை: எம். நடராசன், பொரு: ப. ழனியப்பன், மாவட்டப்: ஆர். தவராசன்.
செயற்குழு 11 பேர்.

**த்தாரிபாளையம்**

செய: கி. வெ. சாமி, துணை: கோ. கிருஷ்ணசாமி, பொரு: கி. ாகவசாமி, மாவட்டப்: கி. வெ. சாமி.
செயற்குழு 20 பேர்.

**தூர் (சிறுமுகூர்)**

செய: சி. நடராசன், துணை: எம். பழனிச்சாமி, பொரு: ஆர். வி. வெள்ளியங்கிரி, மாவட்டப்: ஆர். கே. சுப்ரமணியம்.
செயற்குழு 7 பேர்.

**பல்லடம்**

செய: பி. எம். பொன்னுசாமி, துணை: எம். பழனியப்பன், பொரு: எஸ். எ. பி. சுந்தரம், மாவட்டப்: பி. எம். பொன்னுசாமி.
செயற்குழு: 11 பேர்.

**ஆனைமலை**

செய: எ. எஸ். வெங்கடாசலம், துணை: எ. என். வெங்கடராசு, பொரு: எ. வி. நாராயணசாமி, மாவட்டப்: எ. ஜி. வெங்கடகிருஷ்ணன்.
செய்யற்குழு 21 பேர்.

**சூளேஸ்வரன்பட்டி**

செய: எ. எஸ். எ. சாமி, துணை: எ. கே. சாமி, பொரு: ந. சுப்ரமணியம், மாவட்டப்: எல். என். முத்து.
செயற்குழு 9 பேர்.

**கோபிசெட்டிபாளையம்**

செய: வி. பி. ராசு, துணை: என். கே. யாகூப், பொரு: பி. எல். காளியப்பன், மாவட்டப்: ஜி. என். ராசு, எஸ். எம். கிட்டு.
செயற்குழு 17 பேர்.

**பீளமேடு**

செய: பி. எஸ். வெங்கடேசன், துணை: வி. அங்கப்பன், பொரு: கே. வேலாயுதம், மாவட்டப்: பி. எஸ். வெங்கடேசன்.
செயற்குழு 11 பேர்.

**கோத்தகிரி**

செய: கா. அன்பன், துணை: ச. முத்துமணி, பொரு: அ. வேந்தன், மாவட்டப்: க. இளமதி.
செயற்குழு 11 பேர்.

**புஞ்சைத்தலையூர்**

செய: கே. எஸ். நாச்சிமுத்து, பொரு: கே. ஆர். இளையப்பா, மாவட்டப்: கே. நைனுமகமத்.
செயற்குழு 11 பேர்.

**அத்திபாளையம்**

செய: கோ. வெங்கடசாமி, துணை: ரா. சின்னசாமி, பொரு: கோ. ரா. இராமகிருட்டினன், மாவட்டப்: அ. ரா. தாமோதரம், செயற்குழு: 7 பேர்.

**சிங்கிப்புரம்**

செய: இரா. அரங்கசாமி, துணை: ஆ. சேரலாதன், பொரு: எஸ். கே. பழனிமுத்து, மாவட்டப்: எஸ். பி. கந்தசாமி.
செயற்குழு 7 பேர்.

**பட்டமுடையரள்புரம்**

செய: மா. தவசுமுத்து, துணை: நா. சு. இளங்கோ, பொரு: நா. மு. முத்து, மாவட்டப்: ஆ. வீரபத்திரன்.
செயற்குழு 9 பேர்.

## தஞ்சை மாவட்டம்

**பஞ்சநதிக்குளம்**

செய: கோ. முருகையன், துணை: சொ. சோமசுந்தரம், பொருள்: சேதுசதாசிவன், மாவட்டப்: பண்டரிநாதன், பரஞ்சோதி, செயற்குழு 15 பேர்.

**தேரலி (பின்னத்தூர்)**

செய: சு. கலியாணசுந்தரம், துணை: கா. சிங்காரவேலன், பொருள்: இரா. சண்முகம், மாவட்டப்: ப. நமசிவாயம், செயற்குழு 20 பேர்.

**காலகம்**

செய: எம். கருப்பையா, துணை: வி. கோவிந்தசாமி, பொருள்: எஸ். குழந்தை, மாவட்டப்: பி. ராஜகோபால், செயற்குழு 11 பேர்.

**அட்ஞ்சூர்**

செய: வீ. முத்துசாமி, துணை: ராமரத்தினம், பொருள்: ஏ. பி. பெரியசாமி, மாவட்டப்: ஏ. பி. பெரியசாமி, செயற்குழு 11 பேர்.

**அபிவிருத்தீஸ்வரம்**

செய: ஆ. நடராசன், துணை: டி. எஸ். நாராயணசாமி, பொருள்: பி. டி. அரசு, மாவட்டப்: ஆர். செகநாதன். செயற்குழு 7 பேர்.

**கொரட்ரச்சேரி**

செய பி. எம். முகம்மதுஜாபர், துணை: எஸ். சம்சுதீன், பொருள்: முகமதுஇப்ராகிம், மாவட்டப்: எஸ். எம். வைத்தியலிஙகம், செயற்குழு 7 பேர்.

**கட்டிமேடு**

செய: வி. ஆர். எம். சுல்தான், துணை: கே. ஜப்பார், பொருள்: ஏ. எம். இப்ராகிம், மாவட்டப்: வி. ஆர். எம். சுல்தான், செயற்குழு 14 பேர்.

**பேராவூரணி**

செய: பி. வடிவேல், துணை: ம. கணேசன், பொருள்: எஸ். சூரியமூர்த்தி, மாவட்டப்: கே. அடைக்கலம், செயற்குழு 17 பேர்.

**பனங்குளம்**

செய: ம. சொ. சிவகுருநாதன், துணை: எஸ். வி. சதானந்தம், பொருள்: எம். ஆர். கே. சேகர், மாவட்டப்: ம. ரா. மணிமொழி, செயற்குழு 9 பேர்.

**அய்வநல்லூர் (நாகை)**

செய: எம். கோபாலசாமி, துணை: துணை: எழ். தங்கவேலு, பொருள்; வி. எம். வேலு, மாவட்டப்: வி. எம். வேலு, செயற்குழு 12 பேர்.

**நாடியம்**

செய: இரா. கங்குல்மீனன், துணை: வே. சண்முகம், பொருள்: எஸ். செயராமன், மாவட்டப்: எஸ். ராமையன், எஸ். சோமசுந்தரம், செயற்குழு 10 பேர்.

**வல்லம்**

செய: சாமி, நடராசன், துணை: எஸ். ஆர். சாமி, பொருள்: சபபநதன், மாவட்டப்: இராதா, செயற்குழு 11 பேர்.

## நெல்லைமாவட்டம்

**சிவகிரி**

செய: மா. ராமசாமி, துணை: ப. கணேசன், பொருள்: தி. சோலையப்பன், மாவட்டப்: மு. மதுரம்.

## இராமநாதபுரம் மாவட்டம்

**அருப்புக்கோட்டை**

செய: ச. அ. முத்துச்சாமி, துணை: சு. நடராசன், பொருள்: சி. குமாரவேலு, மாவட்டப்: எம். எஸ். ராமசாமி, சிவசண்முகசுந்தரம், செயற்குழு: 14 பேர்.

**பரகனேரி**

செய: இராம. சுப்ரமணியம், துணை: சி. அந்தோனி, பொருள்: கே. ஆர். எஸ். இளங்கோ, மாவட்டப்: பி. திருஞானசம்பந்தம். செயற்குழு: 7 பேர்.

**சங்கரலிங்கபுரம்**

செய: எம். சொக்கப்பன், துணை: வி. எஸ். பாண்டுரங்கன், பொருள்: பொ. பரமசிவம், மாவட்டப்: டி. வீரபத்ரன். செயற்குழு: 6 பேர்.

**கண்டவராயன்பட்டி**

செய: மு. கருப்பையா, துணை: சா. மாணிக்கம், பொருள்: வீரஇலக்குவன். செயற்குழு: 8 பேர்

**கமுதி**

செய: இல. ம. சவுந்தரபாண்டியன், துணை: கொ. செ. காமாட்சி, பொருள்: செ. அருணசலம், மாவட்டப்: இல. ம. சவுந்தரபாண்டியன். செயற்குழு: 12 பேர்.

**இராமநாதபுரம் (முகவை)**

செய: க. சுப்ரமணியன், துணை: டி. தங்தப்பன், பொருள்: அ. மணி மாவட்டப்: இரா. சவுந்தரபாண்டியன், டி. தங்கப்பன். செயற்குழு: 10 பேர்.

**காளையார்கோயில்**

செய: மு. சேகர், துணை: செ. ம. ரகிம், பொருள்: மு. சண்முகம், மாவட்டப்: மு. இரணியன். செயற்குழு: 12 பேர்.

**தாயில்பட்டி**

செய: வி. எ. கே. சுப்ரமணியன், துணை: என். பி. சாமி, பொருள்: அ. சீ. குமாரசாமி, மாவட்டப்: வி. எ. கே. சுப்ரமணியன். செயற்குழு: 13 பேர்.

**சிவகங்கை**

செய: இரா. தியாகராசன், துணை: சி. சாகுல்அமீது, பொருள்: வே. சோமன், மாவட்டப்: மு. மாரிமுத்து. செயற்குழு: 12 பேர்.

**மேலக்கோட்டையூர் சின்னையாபுரம்**

செய: எஸ். தங்கசாமி, துணை: செந்தூரான், பொருள்: சண்முகசுந்தரம், மாவட்டப்: எஸ். தங்கசாமி, துரைச்சாமி. செயற்குழு: 11 பேர்.

**திருத்தங்கல்**

செய: எம். சேர்மக்கனி, துணை: இரா. பொன்னுப்பாண்டியன், பொருள்: பி. குருசாமி, மாவட்டப்: எஸ். வி. செண்பகமூர்த்தி. செயற்குழு: 13 பேர்.

**மம்சாபுரம்**

செய: அ. கன்னியப்பன், துணை: எம். மரியதாஸ், பொருள்: சி. பாதமுத்து, மாவட்டப்: எ. பி. கே. சாமி செயற்குழு: 11 பேர்.

## சேலம் மாவட்டம்

**மேட்டூர் அணை**

செய: க. கு. சின்னசாமி, துணை: த. ரா. அழகிரிசாமி, பொருள்: மு. ஞயாளதாஸ், மாவட்டப்: க. கு. சின்னசாமி, செயற்குழு: 7 பேர்.

**தாரமங்கலம்**

செய: எ. டி. வேலு, துணை: கே. பி. ருடபுசாமி, பொருள்: ஆர். மாரப்பன், மாவட்டப்: எ. டி. வேலு, டி. கந்தசாமி, செயற்குழு 5 பேர்.

**நாட்டாமங்கலம் (மேட்டூர் அணை)**

செய: எல். ராசு, துணை: கே. பழனியப்பன், பொருள்: வி. சென்ருயன் மாவட்டப்: பி. எம். சோசப் செயற்குழு: 11 பேர்.

**காவேரிப்பட்டி**

செய: ஆ. அருணகிரி துணை: எம் சித்தன், பொருள்: என். பெருமாள், மாவட்டப்: ஆ. அருணகிரி செயற்குழு: 8 பேர்

**ஓடல்பட்டி**

செய: டி. நாகப்பன், துணை: எம். ராஜகோபால், பொருள்: பி. கோவிந்தப்பன், மாவட்டப்: ரா அருணசலம். செயற்குழு 7 பேர்.

**குமாரபாளையம்**

செய: எ. ராஜகோபால், துணை: கே. வெங்கடராமன், பொருள்: க. வே. ராசண்ணன், மாவட்டப்: என் ரகுராமன் செயற்குழு: 12 பேர்.

**பருகூர்**

செய: தி. கோவிந்தராசன், துணை: அருணசலம், பொருள்: எம். கே. நாராயணன், மாவட்டப்: தி. கோவிந்தராசலு, எம். கே. நாராயணன், செயற்குழு: 11 பேர்.

**கிருஷ்ணகிரி**

செய: ஆர். வெங்கடாசலம், துணை ப நாராயணன், பொருள்: ஆர். கேசவன், மாவட்டப்: என். எஸ். அந்தோனிசாமி செயற்குழு: 21 பேர்.

**குமாரசாமிபட்டி**

செய: வே. பெரியசாமி, துணை: எஸ். வி. முத்தியாலு, பொருள்: சி. ரத்தினசாமி, மாவட்டப்: வே. பெரியசாமி, சி ரத்தினசாமி, செயற்குழு: 15 பேர்.

**ஓ கொண்டாலம்பட்டி**

செய: கே. எஸ். அமிர்தம், துணை: கே. வி. பழனிசாமி, பொருள்: எ. என். சித்தன், மாவட்டப்: பி. சுப்ரமணி, கே. எஸ். அமிர்தம். செயற்குழு 21 பேர்.

**செங்கல்பட்டி**

செய: கே. வி. கோபாலன், துணை: எ. சன்ராசு, பொருள்: இரா. வரதராசு, மாவட்டப்: எ. சன்ராசு, செயற்குழு 11 பேர்.

**நரசிங்கபுரம்**

செய: என். கே. கல்லவாண்டு, துணை: எ. சின்னகண்ணு, பொரு: என். என். பெரியசாமி, மாவட்டப்: என். கே. ராசு. செயற்குழு 18 பேர்.

**மாரண்டஅள்ளி**

செய: மா. ஆ. கிருஷ்ணன், துணை: மா. சி. பசவராசன், பொரு: மா. செயராமன், மாவட்டப்: மா. மு. ரங்கநாதன். செயற்குழு: 11 பேர்.

---

**பொதுக் கூட்டம்**

செங்கமேட்டில்
18–10–52 மாலை 6-மணிக்கு
புத்தூர்-இர. கலியமூர்த்தி
தலைமையில்
மு. கருணாநிதி
பேசுவார்.

# தூண்டும்-துணுக்கும்

[வண்டு]

கேள்வி:- மொகலாய சக்ரவர்த்தி மாதிரி டில்லியில் இருக்கிறேன் என்ருரே பண்டிதநேரு, என்ன அர்த்தம்?

பதில்:- மொகலாய சாம்ராஜ்யம்பெரிதாக இருந்தபொழுது, அதன் பலபாகங்களையும் ஆளப்பலராஜப் பிரதிநிதிகள் தேவைப் பட்டார்கள். எல்லாப் பகுதிகளையும் நேரில் ஆள, சக்ரவர்த்திக்குமுடியாததால்தான், மொகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. ராஜப் பிரதிநிதிகள், சிற்றரசர்களாக, ஆனர்கள்.

கே:- அதுபோல, சாம்ராஜ்யத்துக்கும், அதன் பகுதிகளுக்குமிடையே தகராறுகள் இப்போதும் இருக்கிறதோ?

ப:- டில்லியைவிட்டு நேரு 'சக்கரவர்த்தி' இங்கு வந்ததன் ரகசியமே அதுதான்.

*

கேள்:- டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை, 'கல்கி' பத்திரிகைதாக்கி எழுதுகிறதே, அது ஏன்?

ப:- ஆச்சாரியாரை, 'வாலிழந்த நரி' என்றும் 'முட்டாள்' என்றும் பேசினர் என்பதால்.

கேள்:- ஏன், அப்படி கிருஷ்ணமாச்சாரி பேசினர்.

ப:- எல்லாம், பிடிக்காததால்தான்!

*

கேள்:- சென்னையில் பேசும்போது, என்னை இங்கு கொண்டுவந்துவிட முயற்சித்தார்கள். நல்ல வேளையாக ராஜாஜி பொறுப்பேற்றுக் கொண்டார்' என்று கிருஷ்ணமாச்சாரி சொன்னரே என்ன அர்த்தம் இதற்கு?

ப:- அவரை, இங்கு முதலமைச்சராக்க முயற்சி நடந்ததாம். அதை முதலில் ஒத்துக்கொண்ட சிலர், சென்னை வந்ததும் மாறிவிட்டார்களாம். பிறகு, மந்திரியாகவும் 'இடம்' வாங்கிக்கொண்டார்களாம்.

கே:- ஆச்சாரியாரை முதலமைச்சராகும்படி நேரு, கடைசிவரையில் எதுவும் கூறாமல்தானே இருந்தார்.

ப:- ஆமாம்! 'அவருடைய இஷ்டம்' என்றே, ஜாக்கிரதையாகச்சொன்னர்.

கே:- கிருஷ்ணமாச்சாரிக்கு, நேருவிடம் செல்வாக்கு உண்டோ?

ப:- அப்படித்தான் சொல்லுகிருர்கள்!

*

கே:- ஆச்சாரியாரை ஆதரித்து எங்கு போனலும் அவருடைய 'கோஷ்டி' யென்று முன்புசொல்லப்பட்டவர்கள்மட்டுமே பிரசங்கம் செய்வதேன்?

ப:- தேன்குடித்த வண்டுகள் பாடத்தானே செய்யும்!

கே:- காமராஜரை எங்கேகாணோம்?

ப:- பத்திரமாக, சுறு சுறுப்பாக மூலைக்கு வேலை கொடுத்தவண்ணம், தனது நண்பர்களைச் சிந்தித்துப் பேசியபடியே இருக்கிருர்.

கே:- தமிழ் நாட்டுக்காங்கிரசில் அவருடைய சகாக்கள் அதிகமிருந்தும், சுப்பராயனுக்கு விட்டுக் கொடுத்ததேன்?

ப:- தனது சகா, 'தலைவர்' ஆனல், மந்திரிசபையை ஆட்டிவைப்பதாகப் பழிவரும் என்கிற முன் யோசனையால்தான்.

கே:- ஓமந்தூராரால், கட்டாயமாக, மந்திரிப் பதவியை விட்டு விலகப் பட்டவர்தானே டாக்டர் சுப்பராயன்?

ப:- ஆம்! ஆம்!! விலகும்படி நேர்ந்தது.

கே:-என்ன காரணம்?

ப:-'கருப்பான' விஷயத்தை ஏன் 'அம்பல'மாக்கச் சொல்கிருய்!

*

கே:-டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், காமராஜரும் நெருங்கிய அரசியல் நண்பர்களாமே!

ப:-இருக்கலாம்.

*

கே:-முதலமைச்சரான பிறகு, ஆச்சாரியார், முன்பு இந்த காங்கிரஸ் சர்க்காரையும் தலைவர்களையும் 'சாக்கடை' யென்று சொன்னர் அல்லவா?

ப:-சொன்னர்! சொன்னர்!!

கே:-முன்பு இருந்த தலைவர் காமராஜதானே—முன்பு ஆண்டவர்கள் குமாரசாமிராஜா, பக்தவத்சலம் முதலியோர்தானே!

ப:-ஆம்!

கே:-ஆச்சாரியார் பேசிவருவது, அவர்கள் உள்ளத்தில் தைக்காமலா இருக்கும்.

ப:-அவர்களும் மனிதர்தானே!

*

கே:-தமிழ் வளர்ச்சி விழாவில் பக்தவத்சலம் சொற்பொழிவைக் குறித்துப் பேசிய ஆச்சாரியார், "பக்தவத்சலம்,தமிழில்இவ்வளவு ஆராய்ச்சியாகப் பேசினர். இவ்வளவு தமிழ் அறிந்த அவர், மற்றத் துறைகளில் ஈடுபட்ட நேரத்தை தமிழுக்காகச் செலவழித்திருக்கலாமே என்று எண்ணினேன். இனியாவது செய்வார் என்று நம்புகிறேன்" என்ற கருத்தில் கூறினரே, என்ன பொருள் இதற்கு?

ப:-'உயர்வு நவிற்சி'யாகப்பேசி சாதுர்யமாகக் கிண்டல் செய்வதில் சிறந்தவராயிற்றே ஆச்சாரியார்!

கே:-'இனியாவது, மந்திரிப்பதவிக்கு, ஆசை வைக்காதே'— என்று அர்த்தமா?

ப:- என்னைக் கேட்காதே. நீயே, தெரிந்து கொள்.

*

கே:- முதலமைச்சரான பிறகு, ஆச்சாரியார் 'காங்கிரஸ்' குறித்து அதிகம் வலியுறுத்தாமல், 'என் மீது நம்பிக்கையிருந்தால் செய்யுங்கள்", "இவரை ஆதரிக்காவிட்டால் என் மீது நம்பிக்கையில்லை யென்றுதான் அர்த்தம்" என்றெல்லாம் பேசுவதேன்?

ப:- காங்கிரசை விட 'தன்' நிலைமையைச் சரிப்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் தான்.

கே:- அதனல்தான், பி. டி. ராசன்—உஸ்மான் போன்றுரை யெல்லாம் நண்பர்களாக்கிக் கொண்டிருக்கிருரோ!

ப:- ஆம்.

கே:- 'நண்பர்கள் பிடிக்கும் வேட்டை' இன்னும் தொடர்கிறதா......

ப:- நடந்து கொண்டேயிருக்கிறது......

*

கே:- முஸ்லீம் லீகுடன் டாக்டர் சுப்பராயன் பேச்சுவார்த்தை நடத்தினரே, உண்மையா?

ப:- உண்மைதானும்.

கே:- பிறகேன் மறுக்கிருர்கள்.....

ப:- டில்லிக்குப் பயந்து!

*

கே:- மானத்தை இழந்தாலும் பரவாயில்லை. தனக்குப் பலம் தேடவேண்டும் என்று ஆச்சாரியார் அலைவானேன்?

ப:- அவருடைய வீழ்ச்சியை வடநாட்டுக் காங்கிரஸ் புள்ளிகள் எதிர்பார்க்கின்றனர்.

கே:- அங்கும் அவருக்கு எதிரிகள் உண்டா?

ப:- உண்டு! உண்டு!!

*

கே:-கட்சியில்யாருக்குச்செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள் பக்கம் சாய்ந்திருப்பதுதான், பண்டித நேருவின் அரசியல் தந்திரமாமே!

ப:- அப்படித்தான் கூறப்படுகிறது.

கே:- நமது மாகாண காங்கிரசில் எவருக்கு அதிகம் செல்வாக்கென்று அவர் கருதுகிறாராம்?

ப:- பார்ப்பனரல்லாதாரே — அதிகம் என்பதை நீ அறியாயா?

*

கே:- ஆச்சாரியார் முதல் மந்திரியான பின், முக்கியமான பதவிகளில் பார்ப்பனரை நியமித்து வருகிருரல்லவா? அதைக் குறித்து அவரது 'எதிர்ப்புக் கோஷ்டி' என்ன நினைக்கிறதாம்?

ப:- 'பலநாள் பாடுபட்டோம் — சிதறடிக்கிருரே' என்று, பார்ப்பனரல்லாத தேசியத் தோழர்கள் சீறுகிருர்களாம்.

கே:- ஓமந்தூரார் ஆட்சியை பார்ப்பனப் பத்திரிகைகள் கண்டித்ததற்குக் காரணம், அவர்கள் தம்மவருக்குச் சலுகை தரவில்லையென்பதால்தானே!

ப:- ஆமாம்...

*

கே:- வடநாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள், தான் கடன் கேட்டதற்கு ஒத்துழைக்கவில்லையென்று ஆச்சாரியார் சொன்னரல்லவா?

ப:- சொன்னர்.

கே:- "எனது நண்பர் ராமசாமி நாயக்கர் கூறுவதுகூட உண்மையாக யிருக்கலாமோ வென்று நினைக்கிறேன்", என்றும் கூறினர் அல்லவா?

ப:- ஆமாம்! வடநாடு, தென்னட்டை மதிப்பதில்லை என்று ஆத்திரத்தோடு பேசுவதுபோலச் சொன்னர்.

கே:- ஆச்சாரியார், புத்திசாலியாயிற்றே! அவர் அப்படிப் பேசியதன் நோக்கம் என்ன?

ப:- வடநாட்டினரையும், டில்லித் தலைமையையும் மிரட்டத்தான்.

கே:- அந்தப் பேச்சைப் பிரமாதமாகப் பிரசுரித்தனவே, தேசியப் பத்திரிகைகள்?

ப:- ஆமாம்! அவைகள்தான் இன்று ஆச்சாரியாருடைய பீரங்கிகள். வடநாட்டினருக்கு, அவைகள் காட்டிய 'எச்சரிக்கை'தான், அது.

*

கே:- பக்தவச்சலம், 'பாரததேவி' பத்திரிகையை நடத்துகிருராமே!

ப:- ஆம்! 'சிறு குரலாவது' தமது கோஷ்டிக்கு வேண்டாமா?

*

கே:- "கோஷ்டிச் சண்டை" இருக்கிறது என்று சென்னைக் காங்கிரசைக் குறித்து முன்பு காந்தியார் சொன்னரே, கவனம் உள்ளதா?

ப:- ஆமாம்!

கே:- அந்தக் 'கோஷ்டிகள்' இன்னும் போகவில்லையா?

ப:- போகாது! போகாது!! புலியும் நரியும்தானே, மனிதர்களிலும் இருக்கிருர்கள்.

*

கே:- இவ்வளவு விவகாரங்களை வைத்துக்கொண்டு, 'காங்கிரசே-தேசியமகாசபை' என்று செப்புகிருர்களே. வேடிக்கையாக இல்லை!

ப:- வேதனையாகவும் இருக்கிறது—இப்படிப்பட்டோர் அரசியல் வாழ்வில் உலவுவதைக் காணும் போது.

★

# நாடெங்கும் பிரிவினை நாள்

அத்திப்பாளையம்: 20–9–52 கோ. வெங்கிடசாமி தலைமையில் கோபி. ஜி. என். இராசு, வி. சண்முககாதன் ஆகியோர் பேசினர்.

சென்னை: (31-வது வட்டம்) 21—9—52 கா. அப்பாதுரை, தலைமையில் அண்ணு, அன்பன், பாண்டியன், து. கோவிந்தசாமி, மருத்துவமணி, மருதவாணன், வி.இளஞ்சேரலாதன் ஆகியோர் பேசினர்.

சலகண்டாபுரம்: 22—9—52ல் அ. மு. அண்ணுமலை தலைமையில் ப. கண்ணன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் நாட்டுப் பிரிவினை குறித்து நல்லதோர் சொற்பொழிவாற்றினர்.

அலவாக்கோட்டை: 22-9-52ல் சுப. சேதுராமன் தலைமையில் பி. திருஞானம், எஸ். எஸ். தென்னரசு இராமசந்திரன் ஆகியோர் பேசினர்.

சென்னை: (சூளை) 23—9—52ல் மு. மாசலாமணி தலைமையில் இரா. இராசரத்தினம், மு. கலியாணசுந்தரம், ராமநாதன், சின்னசாமி, தாயமணி, குப்புசாமி ஆகியோர் பிரிவினை குறித்து விளக்கமாகப் பேசினர்.

நெல்லிகுப்பம்: 27—9—52ல் அ. தங்கராசு தலைமையில் தோழியர் சத்தியவாணிமுத்து எ.கே.வேலன் ஆகியோர் நாட்டுப் பிரிவினையைக் குறித்துப் பேசினர்.

உத்தரமேரூர்: 28—9—52ல் எ. எஸ். சுந்தரம், வி. வேணுகோபால் ஆகியோர் பேசினர். இரவு இன்பசாகரன் என்னும் சீர்திருத்த நாடகம் நடைபெற்றது.

பெரியகுளம்: 28—9—52ல் எ. சுப்பிரமணியம் அவர்களால் ஓர் கலா நிகழ்ச்சி பிரிவினை நாள் தினத்தையொட்டி நடைபெற்றது.

ஓடைப்பட்டி: 29—9—59ல் சு. முத்துக் காமாட்சி தலைமையில் இரா. நெடுஞ்செழியன், அ. பொன்னம்பலனர் ஆகியோர், நாடு பிரிந்து தீர வேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினர்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.